சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.17.04.2025
O.S.No. 725/2018
DW 1 : ராஜேந்திரன் (வயது 62 ) த/பெ.கோபால்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**வாதி தரப்பு கு.வி**

எங்கள் ஊரில் ராகவேந்திரா ஹைறவே பார்க் என்ற பெயரில் லேஅவுட் உள்ளதா என்றால் உள்ளது. அது எத்தனை ஏக்கர் பரப்பளவில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த லேஅவுட்டில் எத்தனை வீடுகள் வந்திருக்கும் என்று எனக்கு தெரியாது. அந்த லேஅவுட்டில் ரோடுகள் போடப்பட்டு பஞ்சாயத்து பராமரிப்பில் உள்ளது என்ற விவரம் தெரியாது. வாதி எங்கள் இடமான சர்வே எண்.85/11 இடத்தை அவர்கள் கேட்கிறார்கள். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது, எங்கள் இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று மட்டும் தெரியும். எங்கள் இடம் என்பது காலி மனை. எங்கள் இடத்தில் சுமார் 20 வருடத்திற்கு முன்பு சாகுபடி செய்தேன். கடந்த 20 வருடங்களாக அந்த இடம் நிலமாக உள்ளது. அந்த நிலத்தில் பொது மக்கள் அனைவரும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்களா என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.85/11 ரோடா என்று பஞ்சாயத்தில் விசாரித்தேனா என்றால் அது என்னுடைய வேலை இல்லை. சர்வே எண்.85/11 க்கு வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்திலிருந்து வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் வருடம் என்ன என்று தெரியவில்லை. 15 வருடத்திற்கு வில்லங்கம் தாக்கல் செய்துள்ளேன். யார் வில்லங்கம் போட சொன்னார்கள் என்றால் நானும் எனது வீட்டுக்காரம்மாவும் போட்டோம். யாராவது சொத்தினை விற்று விட்டார்களா என்பதற்காக வில்லங்கம் பார்த்தோமா என்றால் ஆமாம். வில்லங்கத்தை பார்த்தவரை யாராவது சொத்தினை விற்றுள்ளார்களா என்றால் இல்லை. எங்கள் சர்வே எண்.85/11 ல் 53 செண்ட் இருக்க வேண்டும், அதில் 29 செண்டை நரேஷ் குமார் என்பவருக்கு விற்று விட்டோம். எந்த வருடம் விற்றோம் என்றால் தெரியவில்லை. மீதி இடம் பூமியில் இருக்க வேண்டும்

என்று சொல்லிகிறேனா என்றால் சரிதான். மீதி இடம் பூமியில் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் வில்லங்கம் பார்த்தோம், வேறு ஏதாவது முறையில் சர்வேயர் வைத்து அளப்பதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால் நாங்கள் ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டும் நட்ட நடுவில் ரோடு போடும் போது நாங்கள் ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரோடு போட்டு விட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.85/11ல் 53 செண்ட் எனக்கு எப்படி பாத்தியம் என்றால் எனது தகப்பனார் சொத்து, அவரது பையனான எனக்கு தான் பாத்தியமானது. அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பட்டா உள்ளது. 2 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது. எனது அத்தை மற்றும் எனது அப்பா பெயரில் உள்ளது. எனது அத்தையின் பெயர் மருதாயி. எனது அப்பா பெயர் கோபால். எனது அத்தை மருதாயிக்கு 29 செண்டை விற்று விட்டோம் மீதமுள்ள இடம் எனது அப்பாவிற்கு உரியது. மீதம் 24 செண்டா என்றால் ஆமாம். தேவராஜ் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. கோபால் யாருக்கு சொத்தை விற்றார் என்றால் யாருக்கும் விற்கவில்லை. பார்வதி என்பவர் எனது அம்மா. சின்னு, பழனியாண்டி, பனையடியான் ஆகியோர்கள் யார் என்றால் கிணற்று பங்குதாரர்கள். சர்வே எண்.85/11ல் கிணறு இருந்ததா என்றால் இருந்தது. அந்த கிணற்றை மூடிவிட்டார்களா என்றால் மூடிவிட்டார்கள். 20.05.1971 ம் தேதியில் சர்வே எண்.85/11ல் சொத்து எங்கள் வகையறாவில் கிரயம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நாங்கள் வில்லங்கம் போட்டபோது அது போன்று ஏதேனும் வில்லங்கம் வந்ததா என்றால் வில்லங்கம் இருந்தது. மேற்படி சொத்தை உறிகிருஷ்ணா என்பவர் வாங்கினாரா என்றால் அது பற்றி தெரியாது. உறிகிருஷ்ணா என்பவரிடமிருந்து எத்தனை நபர்களுக்கு கை மாறியது என்றால் அது பற்றி தெரியாது. நல்லுமூப்பன் மருதாயி என்பவர் எனது அத்தை. அவருக்கு பனையடியான் என்ற ஒரே மகன் என்றால் சரிதான். பனையடியான் சர்வே எண்.85/11ல் அவரது பங்கை நரேஷ் குமாருக்கு கிரயம் செய்துள்ளாரா என்றால் ஆமாம். சர்வே எண்.85/11ல் உள்ள 53 செண்டை வாதியின் முன்னவர்களால்

கிரயம் பெறப்பட்டு மனையிடங்களாக பிரிக்கப்பட்டு, ரோடு போடப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் 1987ல் வழங்கப்பட்டது. பழைய சர்வே ஆவணங்களை தாக்கல் செய்து இந்த வழக்கில் தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் நான் சுவாதின அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. லேஅவுட் போட்ட நபர்களிடம் பணம் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக வம்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed/

ராஜேந்திரன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி